ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1395/22 - 2005 ජුනි 03 වැනි සිකුරාදා - 2005.06.03

1395/22 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.-பீ 21/78

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

24அ எனும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24ஆ என்னும் பிரிவுடனும் அரசியலமைப்பின் 44 (2) ஆ உறுப்புரையுடனும் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய அச்சட்டத்தின் 24அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க ஆகிய நான் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடனான ஆலோசனையுடனும் இலங்கை கிழக்கு பல்கலைக்கழகம் பேரவையினதும் மூதவையினதும் சுவாமி விபுலானந்த இசை, நடனக் கல்லூரியினதும் ஒருப்பாட்டுடனும் இக்கட்டளையின் மூலம் :-

(i) 2005.03.14 ஆந் திகதி முதல் சுவாமி விபுலானந்த இசை, நடனக் கல்லூரியை அழகியற் கற்கைகளில் உயர் கல்வியை வழங்குதல், ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக உயர் கற்கை நிறுவகமொன்றாக அங்கீகரிக்கின்றேன்.

(ii) சொல்லப்பட்ட நிறுவகத்தை இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கின்றேன் ; அத்துடன்

(iii) "சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்" என்னும் பெயர் மகுடத்தைத் குறித்தொதுக்குகின்றேன்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க,
சனாதிபதி.

கொழும்பு,
2005, மே 26.

6-388/1

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.